**செய்தி வெளியீடு எண்:509** **நாள்: 04.08.2017**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று (4.8.2017) தலைமைச் செயலகத்தில், இராமநாதபுரம் மாவட்டம், தனுஷ்கோடியில் 8 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், டி. மாரியூரில் 3 கோடியே 90 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் புதிதாக நிறுவப்பட்டுள்ள மீன் இறங்குதளங்களை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார்கள். மேலும், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் மற்றும் பால்வளத் துறை சார்பில் 13 கோடியே 3 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை திறந்து வைத்தார்கள்.

மீன்வளத்தில் முழுமையான ஒருங்கிணைந்த வளர்ச்சியை அடைந்திடும் வகையில், மீன் உற்பத்தியை அதிகரித்தல், மீன்வளத்தைப் பாதுகாத்தல், நீடித்த வளங்குன்றா மீன்பிடிப்பினை உறுதி செய்தல், நீர்வாழ் உயிரின வளர்ப்பு முறைகளை மேம்படுத்துதல், மீன்பிடிக் கலன்களை பாதுகாப்பாக நிறுத்திட மீன்பிடி துறைமுகங்கள் / மீன் இறங்குதளங்களுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், சுகாதாரமான முறையில் மீன்களை கரையிறக்கி கையாள, கடற்கரை சார்ந்த உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல், உள்நாட்டு மீன் விற்பனை வசதிகளை வலுப்படுத்துதல், மீன்வளப்பிரிவில் மனிதவள மேம்பாட்டை வலுப்படுத்துதல் மற்றும் மீனவர்களின் நலன்களையும் வாழ்க்கைத்தரத்தையும் உயர்த்துதல் போன்ற பல்வேறு திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், இராமநாதபுரம் மாவட்டம், தனுஷ்கோடியில் 8 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், டி. மாரியூரில் 3 கோடியே 90 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் புதிதாக நிறுவப்பட்டுள்ள மீன் இறங்குதளங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று காணொலிக் காட்சி மூலமாகத் திறந்து வைத்தார்கள்.

தனுஷ்கோடியில் புதிதாக நிறுவப்பட்டுள்ள மீன் இறங்குதளம் மூலம், சுமார் 30 விசை படகுகளை நிறுத்தி மீனவர்கள் மீன்களை நேரடியாக வாகனங்களில் ஏற்றி புதிதாக கட்டப்பட்டுள்ள மீன் ஏலக்கூடத்தில் மீன்களை சுகாதார முறையில் விற்பனை

செய்திட இயலும். இதனால் மீன்பிடி தொழில் சார்ந்த சுமார் 2000 மீனவர்களுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு ஏற்படும். மேலும், டி. மாரியூரில் புதிதாக மீன் இறங்குதளம் நிறுவப்பட்டுள்ளதால், சுமார் 1700 மீனவக் குடும்பங்கள் சிரமமின்றி சுலபமாக கடலுக்கு சென்று மீன்பிடி தொழில் செய்ய வழிவகை ஏற்படுத்தப்பட்டுள்ளதோடு, மீனவர்கள் தங்களது வலைகளை பழுது பார்க்கவும், பாதுகாப்பாக வைத்திருக்கவும் அங்கு அமைக்கப்பட்டுள்ள வலை பின்னும் கூடம் உபயோகமாக இருக்கும்.

மேலும், மதுரை பால் பண்ணையில் 1047 சங்கங்களைச் சார்ந்த 29,000 பால் உற்பத்தியாளர்கள் பயன்பெறும் வகையில் 85 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள செயற்கை முறை கருவூட்டல் பயிற்சி மையக் கட்டடம் மற்றும் 2 கோடியே 7 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 530 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட தானியங்கி பலஅடுக்கு பால் பவுடர் சேமிப்பு கிடங்கு;

கோயம்புத்தூர் பால் பண்ணையில் 1 கோடியே 13 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 600 மெட்ரிக் டன் கொள்ளவு கொண்ட பால் பவுடர் சேமிப்பு கிடங்கு; சென்னை, அடையாறு, இந்திரா நகரில் 56 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் குளிர்சாதன வசதியுடன் அமைக்கப்பட்டுள்ள அதிநவீன ஆவின் பாலகம்;

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் சார்பில் சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் 6 கோடியே 48 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஆதார செல் ஆராய்ச்சி மற்றும் மறுசீரமைப்பு மையக் கட்டடம்; தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாட்டில் உள்ள கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 1 கோடியே 94 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தீவனப் பதப்படுத்தும் பிரிவுக் கட்டடம்;

என மொத்தம் 24 கோடியே 93 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை சார்பில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு மீன்வளம், நிதி, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை அமைச்சர் திரு. டி. ஜெயக்குமார், மாண்புமிகு பால்வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. கே.டி. ராஜேந்திரபாலாஜி, மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் டாக்டர். எம். மணிகண்டன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் திரு. பி. பாலகிருஷ்ண ரெட்டி, தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை முதன்மைச் செயலாளர் (முழு கூடுதல் பொறுப்பு) திரு.ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.சி. காமராஜ், இ.ஆ.ப., மீன்வளத் துறை இயக்குநர் திரு.வி.பி. தண்டபாணி, இ.ஆ.ப., தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் டாக்டர் எஸ். திலகர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.**